வண்ணப் படங்களுடன்

நம் மத்தியில் வாழ்ந்த அவர்



இயேசு கிறிஸ்து யார்?

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Greetings from the Captain!

The little book that you hold in your hands is a true miracle, its story goes like this...

After sailing on the high seas for many years, I settled down to work among my fellow seamen in the Port of Antwerp (Belgium). Each day, many Russian ships docked there with thousands of fellow sailors aboard. I smuggled thousands of Bibles to them.

Then in 1989 I discovered two copies of this book in the Russian language. Looking through it, I said to Jesus, 'this book will open their eyes'. I smuggled one of the books to a Russian ship's officer, 'Andre', who was 28 years old.

The following morning I waited for him. When he appeared, his face and eyes were shining. He said two words to me, 'I believe!' Andre's words were a confirmation of what I said to Jesus.

Ever since that moment I have had only one goal: to print and distribute as many of these books as possible. Already, with the help of many people, we have distributed over 20 million of them in 27 languages. Tens of millions of boys, girls and adults all over the world have discovered the real and living Jesus in its lively pages.

My wish for you is that after reading this sparkling book you will say the same words Andre spoke, 'I believe!'.

May God bless you always.

Warmolt Houwing

Captain Warmolt Houwing

நம் மத்தியில் வாழ்ந்த அவர்

இயேசு கிறிஸ்து யார்?
அவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?



இந்தப் புத்தகத்தைப் படித்து
உண்மையை அறிந்துகொள்ளுங்கள்

This Book Belongs To:

....

....

TAMIL

கி.பி.30ல் மத்தியதரைக்கடலை சுற்றியிருந்த ஸ்பெயின், கௌத்தியா, முதல் எகிப்து, சிரியா வரை ரோமப்பேரரசு பரவியிருந்த காலம்
பிரான்ஸ்
இத்தாலி
ஸ்பெயின்
ரோம்
கிரீஸ்
சிரியா
ஆப்பிரிக்கா
பாலஸ்தீனம்
எருசலேம்
ரோமப் பேரரசின் கீழ் சிரியாவின் பகுதிக்குள் இருந்த
யூதேயாவின் தலைநகராகிய எருசலேமின் ரோம ஆளுநரான பிலாத்து தன் படையினரை ஒருநாள் விசாரணை செய்து கொண்டிருந்தான்
தளபதியே, உன் வாராந்திர அறிக்கையில் என்ன குறிப்பிட்டுள்ளாய்?
ஆளுநரே, திரளான மக்களை யோர்தான் நதிக்கரையில் கண்டேன். அங்கே தீர்க்கதரிசி என நம்பப்படும் யோவான் ஸ்நானகன் பிரசங்கித்தான்
அவன் மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதுடன் மேசியா என்னும் புதிய தலைவரின் வருகையைப் பற்றியும் அறிவிக்கிறான்
ம்ம்... ஒரு புதிய படையை உருவாக்கி ரோமராகிய நம்மை விரட்ட ஒரு புதிய தலைவரா...
இதுபோல பல தலைவர்கள் எழும்பியும் நம்மை விரட்டுவதில் எவரும் வெற்றியடையவில்லை

அவர்களின் பரிசுத்த நகரத்தை தரக்குறைவு செய்வதாகவும், நமது ரோம சாம்ராஜ்யத்தின் சின்னங்கள் அவர்களுக்கு அவமானமாக இருந்ததாலும்.
பேரரசரிடம் முறையிட்டு வழக்கில் வெற்றியும் அடைந்து விட்டனர்!
இவர்களை ஆளுவது கடினம். எருசலேமில் ஆளுநராய் இருக்கும் வேலை, ரோமப் பேரரசிலேயே, கடினமான பணியாகும்
தாங்கள் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் என்பதுடன், ஓய்வுநாளில் வேலை செய்யாமலிருக்கவும், யூதரல்லாதோரை தங்கள் ஆலயத்தினுள் அனுமதியாமல் இருக்கவும் இவர்கள் உரிமை பெற்றுள்ளனர்
அது சரிதான் நமது பேரரசிலேயே ரோமக் கடவுள்களை வணங்குவதிலிருந்து இம்மக்கள் மட்டும் விலக்குப் பெற்றுள்ளனர்.
ஓ, இந்த எருசலேம் தேவாலயம் ! இதில் நடக்கும் பண்டிகைக்கு 2 இலட்சம் பேராவது கூடுவார்கள். திடீரென கலகம் ஏதும் செய்து விடுவார்கள்.
அவர்களுடைய நடவடிக்கைகளை நாங்கள் கண்காணிக்கிறோம். குழப்பம் வராதபடி தடுத்து விடுவோம்.
நல்லது தளபதி, யோர்தான் நதிக்கரையில்நடப்பவைகளைக் கவனித்து எனக்கு விபரம் அனுப்பிக் கொண்டிருக்கவும்
நானே அங்கு போகிறேன்
இதைப்பற்றி யூதர்களுடைய அதிகாரிகளும் குழம்பியுள்ளனர். யோவான் ஸ்நானகனைப் பற்றி அவர்களே கவனித்து வருகின்றனர்.

மத்மேயு 3:1-17

அந்நாட்களில் யோவான்ஸ்நானன் யூதேயாவின் வனாந்தரத்தில் வந்து மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபத்திலிருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான். கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருக்குப் பாதைகளை செவ்வைபண்ணுங்கள் என்று வனாந்தரத்திலே கூப்பிடு கிறவனுடைய சத்தம் உண்டென்று ஏசாயா தீர்க்கதரிசியினால் சொல்லப்பட்டவன் இவனே. இந்த யோவான் ஒட்டகமயிர் உடையைத் தரித்து, தன் அரையில் வார்க்கச் சையைக் கட்டிக்கொண்டிருந்தான். வெட்டுக்கிளியும் காட்டுத் தேனும் அவனுக்கு ஆகாரமாயிருந்தது. அப்பொழுது எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தார் அனைவரும் யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய் தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள். பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு

நான்நீரில்
ஞானஸ்நானம்
தருகிறேன்
சுத்திகரிக்கப்
பட்டதின்
அடையாளமாக
எழுப்புகிறேன்
இதற்கிடையில்
தர்க்கதரிசி
சொல்லுபவைகள்
உங்களைத்
தொடவில்லையா?
நாங்கள்
மாற வேண்டிய
அவசியமில்லை
எருசலேமிலுள்ள
ஆசாரியர்
பரிசேயராகிய
தலைவர்களின்
சார்பில் புலனாய்வு
செய்ய
வந்துள்ளோம்
நீ தான் யோவான்
ஸ்நானகனா?
நீ தான்
கிறிஸ்துவா ?
நான் கிறிஸ்து
இல்லை அவரது
செருப்புகளின் வாரை
அவிழ்க்கவும் எனக்குத்
தகுதியில்லை
பின் நீ யார்? எங்கிருந்து
வந்தாய்? யாருடைய பெயரில்
பேசுகிறாய்?
"தேவனுக்கு வழியை
ஆயத்தப்படுத்துங்கள்" என
வனாந்திரத்தில் ஒலிக்கும்
குரலாயிருப்பவன் நான்





வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள் ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள். தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ணவல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். இப்பொழுதே கோடரியானது மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஆகையால் நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார்; அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல; அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக் கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் விளக்கி தமது கோதுமையைக் களஞ்சியத்தில்

சேர்ப்பார்: பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார் என்றான். அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவைவிட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து, நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொழுது



இடங்கொடு. இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது அவருக்கு இடங்கொடுத்தான். இயேசு ஞானஸ்நானம் பெற்று

ஜலத்திலிருந்து கரையேறினவுடனே இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது.

30 வயதில் யோர்தான் நதியில் இயேசு ஞானஸ்நானம் பெற்றார். அவர் யார் ? யோசேப்பின் மகன் என்றும் நாசரேத்தின் தச்சன் என்றும் அழைக்கப்பட்டார். அவர் தாய் யோவான்ஸ்நானகனின் தாயின் உறவுப் பெண்ணான மரியாள். இயேசுவின் பிறப்பைப் பற்றிய சில சம்பவங்களை அவரது பெற்றோர் சொல்லுகிறார்கள்.

ஒரு ஓய்வுநாளில் மாரியாளின் பெற்றோர் ஜெப ஆலயத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பி வந்தனர்.

லூக்கா : 1:26-38

ஆறாம் மாதத்திலே காபிரியேல் என்னும் தூதன், கலிலேயாவிலுள்ள நாசரேத்தென்னும் ஊரில் தாவீதின் வம்சத்தானாகிய யோசேப்பு என்கிற நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஒரு கன்னிகையினிடத்திற்கு தேவனாலே அனுப்பப்பட்டான். அந்தக் கன்னிகையின் பேர் மரியாள். அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து, கிருபை பெற்றவளே ! வாழ்க ! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். அவளோ அவனைக் கண்டு அவன் வார்த்தையினால் கலங்கி இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ என்று சிந்தித்துக் கொண்டிருந்தாள். தேவதூதன் அவளை நோக்கி "மரியாளே பயப்படாதே; நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய். இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. அவர் பெரியவராயிருப்பார். உன்னதமானவருடைய குமாரன் என்னப்படுவார். கர்த்தராகிய தேவன் அவருடைய பிதாவாகிய தாவீதின் சிங்காசனத்தை அவருக்குக் கொடுப்பார்; அவர் யாக்கோபின் குடும்பத்தாரை என்றென்றைக்கும் அரசாளுவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவிராது" என்றான். அதற்கு மரியாள் தேவதூதனை நோக்கி: இது எப்படியாகும் ? புருஷனை அறியேனே என்றாள் தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக பரிசுத்த ஆவி உன்மேல் வரும் உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும் ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன்

எனக்குப் புரியவில்லை கன்னியாகிய நான் எப்படிக் குழந்தை பெற முடியும் ?
பரிசுத்த ஆவியானவரும் உன்னதமான தேவனுடைய பலமும் உன்மேல் வரும் நீ பெறும் குழந்தை பரிசுத்தமுள்ள தேவகுமாரனாயிருப்பார். உன் உறவினளாகிய எலிசபெத் தன் முதிர் வயதில் குழந்தை பெறப் போகிறாள். இது அவளுக்கு ஆறாவது மாதம் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை!
நான் தேவனுக்கு அடிமை நீர் சொன்னபடியே நடக்கட்டும்.
சில நாட்களுக்குப் பின்னர்
அம்மா நமது உறவினரான எலிசபெத் வீட்டில் சில வாரங்களை கழிக்க விரும்புகிறேன்
உண்மையாகவா! முன் கூட்டியே எதுவும் சொல்லவில்லையே
நீ போவது எலிசபெத்துக்கும் சகரியாவுக்கும் மகிழ்ச்சியைத் தரும். ஆனால் தூரமான யூதேயாவில் அல்லவா இருக்கிறார்கள்
எருசலேம் செல்லும் வழியில் நாசரேத் வரும் கூட்டத்தாருடன் நீ போகலாம்.
மரியாள் யூதாவை நோக்கிப் பயணப்பட்டுச் செல்கிறாள்.
கவனமாய் கொண்டு போய் சேர்க்கும் யாருடைய பொறுப்பிலாவது உன்னை அனுப்பி வைக்கிறேன்
எனக்குப் பயமில்லை தேவன் என்னைப் பாதுகாப்பார் !
தேவன் தமது பிரசன்னத்தால் என்னை ஆசீர்வதித்துள்ளார். பாவங்களி-லிருந்து விடுவிக்கும் மேசியாவின் தாயாகப்போகிறேன். என தேவன் கூறியுள்ளார். என் உறவின-ராகிய எலிசபெத் பற்றி கூறப்பட்டது உண்மையா எனப் பார்க்கப் போகிறேன்.
நாசரேத்தின் மரியாளே, உனது உறவினரான எலிசபெத் வாழும் கிராமம் அதோ அந்தப்பள்ளத்தாக்கில் தான் உள்ளது. இதே வழியில் நீ போகலாம்.
மிக்க நன்றி தேவன் உங்களைப் பாதுகாப்பாராக!

என்னப்படும், இதோ உனக்கு இனத்தாளாயிருக்கிற எலிசபெத்தும் முதிர்வயதிலே, ஒரு புத்திரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள். மலடியென்னப்பட்ட அவளுக்கு இது ஆறாம் மாதம் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான். அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றான். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்.

லூக்கா : 1:39-64

அந்நாட்களில் மரியாள் எழுந்து மலைநாட்டிலே யூதாவிலுள்ள ஒரு பட்டணத்திற்குத் தீவிரமாய்ப் போய், சகரியாவின் வீட்டுக்குள் பிரவேசித்து எலிசபெத்தை வாழ்த்தினாள். எலிசபெத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டபொழுது அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை துள்ளிற்று; எலிசபெத்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு உரத்த சத்தமாய்; ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்; உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது; என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ, நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்தவுடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய்த் துள்ளிற்று; விசுவாசித்தவளே பாக்கியவதி கர்த்தாலே அவளுக்குச் சொல்லப்பட்டவைகள் நிறைவேறும் என்றாள்; அப்பொழுது மரியாள், என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது.

காபிரியேல் தூதன் அவரிடம் எங்களுக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் அவனுக்கு யோவான் எனப் பெயரிடும்படி கூறியுள்ளான்.
வரப்போகிற மேசியாவுக்கு வழியை ஆயத்தம் செய்வதே அவன் பணியாக இருக்கும்
தேவனே என் ஜெபம் உம்மிடம் கடந்து வருவதாக
என்ன நடக்கிறது? ஏதோ ஒன்றை வெளிப்படுத்தும்படி தேவன் தமது தூதனை என்னிடம் அனுப்புகிறார்.
எனக்கு வயதாயிற்று.. இது நடக்காது என சகரியா சந்தேகித்தார்.
அது முதல் அவர் ஊமையாயிருப்பதே அடையாளம் என்று தேவதூதன் சொல்லி விட்டான்.

மூன்று மாதங்கள் மரியாள் எலிசபெத்துடன் தங்கியபின் நாசரேத் திரும்பினாள். பின் எலிசபெத் ஒரு மகனைப் பெற்றாள்; எட்டாம் நாளில் பிள்ளைக்கு விருத்தசேதனம் செய்யவும் பெயரிடவும் வேண்டிய சமயம் வந்தது.

ன் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது. அவர் ம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்.

இதோ இது முதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள். வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார். அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது. அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது. தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார். இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர் களைச் சிதறடித்தார். பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார். பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார். நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும்

இரக்கஞ்செய்ய நினைத்து, தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள். மரியாள் ஏறக்குறைய மூன்றுமாதம் அவளுடனே இருந்து தன் வீட்டுக்குத் திரும்பிப்போனாள். எலிசபெத்துக்குப் பிரசவகாலம் நிறைவேறினபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள். கர்த்தர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை விளங்கப் பண்ணினாரென்று அவளுடைய அயலகத்தாரும் பந்து ஜனங்களும் கேள்விப்பட்டு அவளுடனே கூட சந்தோஷப்பட்டார்கள். எட்டாம் நாளிலே பிள்ளைக்கு விருத்தசேதனம் பண்ணும்படிக்கு அவர்கள் வந்து, அதின் தகப்பனுடைய நாமத்தின்படி அதற்குச் சகரியா என்று பேரிடப்போனார்கள். அப்பொழுது அதின் தாய் அப்படியல்ல, அதற்கு யோவான் என்று பேரிட வேண்டும் என்றாள். அதற்கு அவர்கள் உன் உறவின் முறையாரில் இந்தப் பேருள்ளவன் ஒருவனும் இல்லையே என்று சொல்லி, அதின் தகப்பனை நோக்கி; இதற்கு என்ன பேரிட மனதாயிருக்கிறீர் என்று சைகையினால் கேட்டார்கள். அவன் எழுத்துப்பலகையைக் கேட்டுவாங்கி, இவன் பேர் யோவான் என்று

மரியாள் நாசரேத் திரும்பி வந்த சில
மாதங்களுக்குப் பின்னர்

எழுதினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்; உடனே அவனுடைய வாய் திறக்கப்பட்டு, அவனுடைய நாவும் கட்டவிழ்க்கப்பட்டு, தேவனை ஸ்தோத்திரித்துப் பேசினான்.

மத்தேயு : 1:18-25

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில் அவர்கள் கூடிவருமுன்னே, அவள் புருஷனாகிய யோசேப்பு நீதிமானாயிருந்து அவளை அவமானப்படுத்த மனதில்லாமல் இரகசியமாய் அவளைத் தள்ளிவிட யோசனையாயிருந்தான். அவன் இப்படிச் சிந்தித்துக் கொண்டிருக்கையில் கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச்சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே! அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை

விரைவிலேயே யோசேப்பு மரியாளின் திருமணம் நடைபெற்றது.



நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றாள். தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. அவன் இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள் என்று சொன்னான். இம்மானுவேல் என்பதற்கு தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்; யோசேப்பு நித்திரை தெளிந்து எழுந்து கர்த்தருடைய தூதன் தனக்குக் கட்டளையிட்டபடியே தன் மனைவியை சேர்த்துக்கொண்டு அவன் தன் முதற்பேறான குமாரனைப் பெறுமளவும் அவளை அறியாதிருந்து அவருக்கு இயேசு என்று பேரிட்டான்.

லூக்கா 2:1-20

அந்நாட்களில் உலகமெங்கும் குடிமதிப்பு எழுதப்படவேண்டுமென்று அகுஸ்துராயனால் கட்டளை பிறந்தது. சீரியாநாட்டிலே சிரேனியு என்பவன் தேசாதிபதியாயிருந்தபோது இந்த முதலாம் குடிமதிப்பு உண்டாயிற்று. அந்தப்படி குடிமதிப்பெழுதப்படும்படிக்கு எல்லாரும் தங்கள் தங்கள் ஊர்களுக்குப் போனார்கள். அப்பொழுது யோசேப்பும் தான் தாவீதின் வம்சத்தானும் குடும்பத்தானுமாயிருந்த படியினாலே தனக்கு மனைவியாக நியமிக்கப்பட்டுக் கர்ப்பவதியான மரியாளுடனே குடிமதிப் பெழுதப்படும்படி, கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து யூதேயா நாட்டிலுள்ள பெத்லகேம் என்னும் தாவீதின் ஊருக்குப்

உறவினரது வீடுகளில்

அன்று இரவில் மரியாள் தன் முதல் மகனைப் பெற்றெடுத்தாள்.

அவள் மகனைத் துணியில் சுற்றி முன்னணையில் கிடத்தினாள்.

போனான். அவ்விடத்திலே அவர்கள் இருக்கையில், அவளுக்குப் பிரசவகாலம் நேரிட்டது. அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லா திருந்தபடியினால் பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள்; அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள்; தேவதூதன் அவர்கள் நோக்கி பயப்படாதிருங்கள்; இதோ ! எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு

இரவில் வயல்களில் மேய்ப்பர் மந்தையைக் காவல் செய்து கொண்டிருந்தனர்

மறு நாளில் இச்செய்தி வேகமாகப் பரவியது.

ஆபிரகாமுடன் தேவன் செய்த உடன்படிக்கையின் அடையாளமான விருத்தசேதனம் எட்டாவது நாளில் செய்யப்பட்டது.



அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான்; அந்தக் க்ஷணமே பரம சேனையின் திரள் அந்த தூதனுடனே தோன்றி: உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள்; தேவதூதர்கள் அவர்களை விட்டுப் பரலோகத்துக்குப் போனபின்பு, மேய்ப்பர்கள் ஒருவரையொருவர் நோக்கி நாம் பெத்லகேம் ஊருக்குப்போய் நடந்ததாகக் கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்ட இந்தக் காரியத்தைப் பார்ப்போம் வாருங்கள் என்று சொல்லி தீவிரமாய் வந்து மரியாளையும் யோசேப்பையும் முன்னணையிலே கிடத்திருக்கிற பிள்ளையையும் கண்டார்கள்; கண்டு அந்தப் பிள்ளைளையைக் குறித்துத் தங்களுக்குச் சொல்லப்பட்ட சங்கதியைப் பிரசித்தம் பண்ணினார்கள்; மேய்ப்பராலே தங்களுக்குச் சொல்லப்பட்டதைக் கேட்ட யாவரும் அவைகளைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். மரியாளோ, அந்தச்சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலே வைத்து சிந்தனைபண்ணினாள். மேய்ப்பர்களும் தங்களுக்குச் சொல்லப்பட்டதின்படியே கேட்டு, கண்ட எல்லாவற்றிற்காகவும் தேவனை மகிமைப்படுத்தி, துதித்துக் கொண்டு திரும்பிப் போனார்கள்.

லூக்கா 2 : 22-35

மோசேயின் நியாயப் பிரமாணத்தின்படியே அவர்களுடைய சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமான தென்னப்படும் என்று கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கவும்; கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒரு ஜோடி காட்டுப்புறாவையாவது இரண்டு புறாக்குஞ்சுகளையாவது பலியாக செலுத்தவும்; அவரை எருசலேமுக்குக் கொண்டு போனார்கள். அப்பொழுது சிமியோன் என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான். அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும் இஸ்ரவேலின் ஆறுதல்வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான். அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார். கர்த்தருடையகிறிஸ்துவை நீ காணுமுன்னே மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே

அவனுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டு வருகையில், அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்திரித்து, ஆண்டவரே உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர். புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய

இயேசுவின் இளமையில் சொந்த நாட்டவர் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. எனினும் கீழ்த்திசை நாடுகளிலிருந்து ஞானிகள் எருசலேம் வந்து சேர்ந்தனர்.

இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான். அவரைக் குறித்துச் சொல்லப்பட்டவைகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயாரும் ஆச்சரியப்பட்டார்கள். பின்னும் சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து அவருடைய தாயாகிய மரியாளை நோக்கி, இதோ அநேகருடைய இருதய சிந்தனைகள் வெளிப்படத்தக்கதாக இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும் எழுந்திருக்கிறதற்கும் விரோதமாகப் பேசப்படும் அடையாளமாவதற்கும் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்.

மத்தேயு : 2:1-12

ஏரோது ராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே இயேசு பிறந்தபொழுது, கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் எருசலேமுக்கு வந்து, யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே ? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் என்றார்கள். ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடு கூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள்; அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லோரையும் கூடிவரச் செய்து, கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான்; அதற்கு அவர்கள் யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால் யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்; அப்பொழுது, ஏரோது சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து நட்சத்திரம் காணப்பட்ட

சில நாட்கள் ஏரோது
காத்திருந்தான்.

சில காலம் அங்கிருந்த பின் யோசேப்பும் மரியாளும் கலிலேயாவிலுள்ள நாசரேத்திற்கு திரும்பிவந்தனர். அங்கே இயேசு சரீர வளர்ச்சியிலும் ஞானத்திலும் விருத்தி யடைந்தார். தம் பெற்றோருக்கு அவர் கீழ்படிதலுள்ளவராயிருந்தார். முப்பதாவது வயதில் அவர் யோவான் ஸ்நானகனிடம் சென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்.

காலத்தைக்குறித்து அவர்களிடத்தில் திட்டமாய் விசாரித்து நீங்கள் போய் பிள்ளையைக்குறித்து திட்டமாய் விசாரியுங்கள். நீங்கள் அதைக் கண்டபின்பு நானும் வந்து அதைப்பணிந்துகொள்ளும்படி எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி, அவர்களைப் பெத்லகேமுக்கு அனுப்பினான். ராஜா சொன்னதை அவர்கள் கேட்டுப் போகையில், இதோ, அவர்கள் கிழக்கிலே கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த ஸ்தலத்திற்குமேல் வந்து நிற்கும்வரைக்கும் அவர்களுக்குமுன் சென்றது. அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதைப் பணிந்துகொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள். பின்பு, அவர்கள் ஏரோதினிடத்திற்குத் திரும்பிப் போகவேண்டாமென்று சொப்பனத்தில் தேவனால் எச்சரிக்கப்பட்டு வேறு வழியாய்த் தங்கள் தேசத்திற்கு திரும்பிப்போனார்கள்.

ஒரு நாள் இயேசு போவதை யோவான்ஸ்நானகன் கண்டு...
என் சீஷர்களே அதோ போகிறவரைப் பார்த்தீர்களா?
அவர்தாம் இவ்வுலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கப் போகிற தேவனுடைய ஆட்டுக்குட்டியானவர்
அப்படியானால் அவர்கள் கிறிஸ்துவாகிய மேசியாவாக இருக்க வேண்டும்
தேவ ஆவியானவர் பரலோகத் திலிருந்து அவர் மேல் இறங்கினதை கண்டதால்தான் அவர் தேவகுமாரனென்று சாட்சி கொடுக்கிறேன்
வா அந்திரேயா நாம் அவர் பின் செல்வோம்
என்ன தேடுகிறீர்கள்?
நீர் எங்கு தங்கியிருக் கிறீர்? உம்முடன் பேச விரும்புகிறோம்
வந்து பாருங்கள்
அவர்கள் அவரோடு நேரம் செலவு செய்தனர்
அது உள்ளத்தை தொடும் உரையாடல் அல்லவா!
இதை என் சகோதரன் சீமோனுக்கு சொல்ல வேண்டும்
சீமோனே நாங்கள் கிறிஸ்துவாகிய மேசியாவை கண்டோம். நீயும் உடனே வந்து பார்
கிறிஸ்துவாகிய மேசியாவா? இருக்காது
மீன் பிடிக்கும் சீமோனே! இனி உன் பெயர் பேதுரு என்னைப் பின்பற்றி வா!
இயேசுவே! இவன் பிலிப்பு பெத்சாயிதாவை சேர்ந்த எங்கள் நண்பன்
பிலிப்பு நீயும் என்னை பின்பற்றி என் சீஷனாயிரு
பிலிப்பு இதை தன் நண்பனுக்கு சொல்லும்படி வேகமாய் சென்றான்.

யோவான் : 1:35-42

மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும்போது, இயேசு நடந்துபோகிறதை அவன் கண்டு: இதோ தேவ ஆட்டுக்குட்டி என்றான். அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள். இயேசு திரும்பி, அவர்கள் பின் செல்லுகிறதைக் கண்டு என்ன தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ரபீ நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம். அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது. யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின்சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக்கண்டோம் என்று சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம் பின்பு அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டுவந்தான். இயேசு அவனைப் பார்த்து நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்: கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.





யோவான் :2:1-11

மூன்றாம்நாளிலே கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே ஒரு கலியாணம் நடந்தது. இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள். இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சைரசம் குறைவுபட்ட போது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சை ரசம் இல்லை என்றாள். அதற்கு இயேசு ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்றாள். யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது. இயேசு வேலைக்காரரை நோக்கி, ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார். அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டு



போங்கள் என்றார். அவர்கள் கொண்டு போனார்கள். அந்தத் திராட்சைரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்கு தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சைரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது மணவாளனை அழைத்து, எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சைரசத்தைக் கொடுத்து ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு ருசிகுறைந்ததைக் கொடுப்பான். நீரோ நல்லரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக் கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார். அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.



லூக்கா : 4:38-40

பின்பு அவர் ஜெப ஆலயத்தை விட்டுப் புறப்பட்டு, சீமோன் வீட்டில் பிரவேசித்தார். சீமோனுடைய மாமி கடும் ஜுரமாய்க் கிடந்தாள்; அவளுக்காக அவரை வேண்டிக்கொண்டார்கள். அவர் அவளிடத்தில் குனிந்து நின்று ஜுரம் நீங்கும்படி கட்டளையிட்டார். அது அவளை விட்டு நீங்கிற்று; உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள். சூரியன் அஸ்தமித்தபோது ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர் மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து அவர்களைச் சொஸ்தமாக்கினார்.





க்கா : 5:1-11

ன்பு அவர் கெனேசரேத்துக் கடலருகே நின்றபோது திரளான ஜனங்கள்
வசனத்தைக் கேட்கும்படி அவரிடத்தில் நெருங்கினார்கள். அப்பொழுது
கரையிலே நின்ற இரண்டு படவுகளைக் கண்டார். மீன்பிடிக்கிறவர்கள்
வைகளை விட்டிறங்கி வலைகளை அலைசிக்கொண்டிருந்தார்கள்.
ப்பொழுது அந்தப் படவுகளில் ஒன்றில் ஏறினார். அது சீமோனுடைய
யிருந்தது அதைக் கரையிலிருந்து சற்றே தள்ளும்படி அவனைக்
ட்டுக்கொண்டு அந்தப் படவில் உட்கார்ந்து ஜனங்களுக்குப்
தகம்பண்ணினார். அவர் போதகம் பண்ணி முடித்த பின்பு, சீமோனை
க்கி ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய் மீன்பிடிக்கும்படி உங்கள்

வலைகளைப் போடுங்கள் என்றார். அதற்குச் சீமோன், ஐயரே இரவு முழுவதும் நாங்கள் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படவில்லை. ஆகிலும் உம்முடைய வார்த்தையின்படியே வலையைப் போடுகிறேன் என்றான். அந்தப்படியே அவர்கள் செய்து தங்கள் வலை கிழிந்துபோகத்தக்கதாக மிகுதியான மீன்களைப் பிடித்தார்கள். அப்பொழுது மற்றப் படகிலிருந்த கூட்டாளிகள் வந்து தங்களுக்கு உதவி செய்யும்படிக்குச் சைகை காட்டினார்கள். அவர்கள் வந்து இரண்டு படவுகளும் அமிழத்தக்கதாக நிரப்பினார்கள். சீமோன் பேதுரு அதைக்

ண்டு இயேசுவின் பாதத்தில் விழுந்து, ஆண்டவரே நான் பாவியான னுஷன், நீர் என்னை விட்டுப் போகவேண்டும் என்றான். அவர்கள் ரளான மீன்களை பிடித்ததினிமித்தம் அவனுக்கும் அவனோடுகூட ருந்த யாவருக்கும் பிரமிப்புண்டானபடியினால், அப்படிச்சொன்னான். ீமோனுக்கு கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய க்கோபும், யோவானும், அந்தப்படியே பிரமித்தார்கள். அப்பொழுது யேசு சீமோனை நோக்கி: பயப்படாதே! இதுமுதல் நீ மனுஷரைப் டிக்கிறவனாயிருப்பாய் என்றார். அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி எல்லாவற்றையும் விட்டு அவருக்குப் பின் சென்றார்கள்.



மத்தேயு : 4:23-25

பின்பு இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும், சகல நோய்களையும் நீக்கிச் சொஸ்தமாக்கினார். அவருடைய கீர்த்தி சீரியா எங்கும் பிரசித்தமாயிற்று. அப்பொழுது பலவிதவியாதிகளையும் வேதனைகளையும் அடைந்திருந்த சகல பிணியாளிகளை பிசாசுபிடித்தவர்களையும் சந்திரரோகிகளையும் திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டுவந்தார்கள் அவர்களைச் சொஸ்தமாக்கினார். கலிலேயாவிலும் தெக்கப்போலியிலும் எருசலேமிலும் யூதேயாவிலும் யோர்தானுக்கு அப்புறத்திலும் இருந்து திரளான ஜனங்கள் வந்து அவருக்குப் பின்சென்றார்கள்.





லூக்கா:5:12-14

பின்பு அவர் ஒரு பட்டணத்தில் இருக்கையில் குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் இயேசுவைக் கண்டு, முகங்குப்புற விழுந்து, ஆண்டவரே! உமக்குச்சித்தமானால் என்னைச் சுத்தமாக்க உம்மாலே ஆகும் என்று அவரை வேண்டிக் கொண்டான். அவர் தமது கையை நீட்டி அவனைத் தொட்டு எனக்குச் சித்தமுண்டு சுத்தமாகு என்றார். உடனே குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று. அவர் அவனை நோக்கி நீ இதை ஒருவருக்கும் சொல்லாமல் போய் உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து நீ சுத்தமானதினிமித்தம் மோசே கட்டளையிட்டபடியே, அவர்களுக்குச்சாட்சியாகப் பலி செலுத்து என்று கட்டளையிட்டார்.

மத்தேயு 9 : 9-13

இயேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுப்போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த மத்தேயு என்னும் ஒருமனுஷனைக் கண்டு, எனக்குப்பின் சென்று வா என்றான்; அவன் எழுந்து அவருக்குப்பின் சென்றார். பின்பு அவர் வீட்டிலே போஜனப் பந்தியிருக்கையில், அநேக ஆயக்காரரும் பாவிகளும் வந்து இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூட பந்தியிருந்தார்கள். பரிசேயர் அதைக்கண்டு அவர்களுடைய சீஷர்களை நோக்கி உங்கள் போதகர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போஜனம் பண்ணுகிறதென்ன என்று கேட்டார்கள். இயேசு அதைக்கேட்டு பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

ாற்கு 2:1-12

சில நாட்களுக்குப் பின்பு அவர் மறுபடியும் கப்பர்நகூமுக்குப் போனார்; அவர் வீட்டிலிருக்கிறாரென்று ஜனங்கள் கேள்விப்பட்டு, உடனே வாசலுக்கு முன்னும் நிற்க இடம்போதாதபடிக்கு அநேகர் கூடிவந்தார்கள்; அவர்களுக்கு வசனத்தைப் போதித்தார். அப்பொழுது நாலுபேர் ஒரு திமிர்வாதக்காரனைச் சுமந்துகொண்டு அவரிடத்தில் வந்தார்கள். ஜனக்கூட்டத்தினிமித்தம் அவருக்குச் சமீபமாய்ச்





சேரக்கூடாமல் அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்துத் திறப்பாக்கி, திமிர்வாதக்காரன் கிடக்கிற படுக்கையை இறக்கினார்கள். இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். அங்கே உட்கார்ந்திருந்த வேதபாரகரில் சிலர் இவன் இப்படித் தேவதூஷணம் சொல்லுகிறதென்ன ? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார் என்று தங்கள் இருதயங்களில் சிந்தித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறார்களென்று இயேசு உடனே தம்முடைய ஆவியில் அறிந்து அவர்களை நோக்கி நீங்கள் உங்கள் இருதயங்களில் இப்படிச் சிந்திக்கிறதென்ன ? உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ எழுந்து உன் படுக்கையை



...துக்கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது ?
...லே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு
...காரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று
...ல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி, நீ எழுந்து உன்
...க்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போ என்று
...க்குச் சொல்லுகிறேன் என்றார். உடனே அவன் எழுந்து
...டுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப்
...னான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு, நாம்
...காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி,
...னை மகிமைப்படுத்தினார்கள்.

லூக்கா 7:36-50

பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம் பண்ணவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான். அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார். அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ, அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து ஒரு பரணியில் பரிமள தைலம் கொண்டு வந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்துத் தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்; அவரை அழைத்த பரிசேயன்

இதைக் கண்டபோது இவர் தீர்க்கதரிசியாயிருந்தால், தம்மைத் தொடுகிற
இன்னாளென்றும், இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார். இவள்
பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். இயேசு
அவனை நோக்கி: சீமோனே! உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும்
என்றார். அதற்கு அவன், போதகரே! சொல்லும் என்றான். அப்பொழுது
ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள். ஒருவன் ஐந்நூறு
வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டிய
இருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது இருவருக்கும்
கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க அவர்களில் எவன் அவனிடத்தில்
அன்பாயிருப்பான்? அதைச்சொல் என்றார்.



மகதலாவைச் சேர்ந்த மரியாள் என்ற அப்பெண் அன்று முதல் இயேசுவைப் பின்பற்ற ஆரம்பித்தாள்.

சீமோன் பிரதியுத்தரமாக எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான். அதற்கு அவர் சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே! நான் உன் வீட்டில் பிரவேசித்தேன்! நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை. இவளோ கண்ணீரினால் என் கால்களை நனைத்து தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்; நீ என்னை முத்தஞ் செய்யவில்லை இவளோ நான் உட்பிரவேசித்தது முதல் என்பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்; நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்; ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன். இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்புகூருவான் என்று சொல்லி அவளை நோக்கி உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது கூடப் பந்தியிருந்தவர்கள் பாவங்களை மன்னிக்கிற இவன் யார், என்று தங்களுக்குள்ளே சொல்லிக் கொண்டார்கள். அவர் ஸ்திரீயை நோக்கி, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. சமாதானத்தோடே போ என்றார்.



லூக்கா : 7:11-17

மறுநாளிலே அவர் நாயீன் என்னும் ஊருக்குப் போனார் அவருடைய சீஷர் அநேகரும் திரளான ஜனங்களும் அவருடனேகூடப் போனார்கள்.

அவர் ஊரின் வாசலுக்குச் சமீபித்தபோது மரித்துப்போன ஒருவனை அடக்கம் பண்ணும்படி கொண்டு வந்தார்கள். அவன் தன் தாய்க்கு ஒரே மகனாயிருந்தான். ஊராரில் வெகு ஜனங்கள் அவளுடனேகூட வந்தார்கள். கர்த்தர் அவளைப் பார்த்து, அவள் மேல் மனதுருகி, அழாதே என்று சொல்லி கிட்ட வந்து பாடையைத் தொட்டார்; அதைச் சுமந்தவர்கள் நின்றார்கள். அப்பொழுது அவர் வாலிபனே! எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத் தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இந்தச் செய்தி யூதேயா தேசமுழுவதிலும் சுற்றியிருக்கிற திசைகள் யாவற்றிலும் பிரசித்தமாயிற்று.

யோவான் : 6: 1-15

இவைகளுக்குப்பின்பு, இயேசு திபேரியாக்கடல் என்னப்பட்ட கலிலேயாக் கடலில் அக்கரைக்குப் போனார். அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப் பின் சென்றார்கள். இயேசு மலையின்மேல் ஏறி அங்கே தம்முடைய சீஷருடனே கூட உட்கார்ந்தார். அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா சமீபமாயிருந்தது. இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து திரளான ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு பிலிப்புவை நோக்கி, இவர்கள் சாப்பிடத்தக்கதாக, அப்பங்களை எங்கே கொள்ளலாம் என்று கேட்டார். தாம் செய்யப்போகிறதை அறிந்திருந்தும் அவனைச் சோதிக்கும்படி இப்படிக் கேட்டார். பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தரமாக; இவர்களில் ஒவ்வொருவனும் கொஞ்சங் கொஞ்சம் எடுத்துக்கொண்டாலும், இரு நூறு பணத்து அப்பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான். அப்பொழுது அவருடைய சீஷரிலொருவனும் சீமோன் பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை நோக்கி: இங்கே ஒரு பையன் இருக்கிறான். அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு. ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான். இயேசு ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார். அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது; பந்தியிருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள். இயேசு அந்த அப்பங்களை எடுத்து ஸ்தோத்திரம்பண்ணி சீஷர்களிடத்தில் கொடுத்தார். சீஷர்கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள். அவர்கள் திருப்தியடைந்தபின்பு அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி



ற்றுச் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச்
ர்ந்து வையுங்கள் என்றார். அந்தப்படியே சேர்த்து
ற்கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள்சாப்பிட்டு மீதியான
ணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடைகளை நிரப்பினார்கள்.
யேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு, மெய்யாகவே
ன் உலகத்தில் வருகிறவரான தீர்க்கதரிசி என்றார்கள்.
தலால் அவர்கள் வந்து தம்மை ராஜாவாக்கும்படி
டித்துக்கொண்டு போக மனதாயிருக்கிறார்களென்று இயேசு
ந்து மறுபடியும் விலகி தனியே மலையின்மேல் ஏறினார்.

மத்தேயு : 16:13-17

பின்பு இயேசு பிலிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது தம்முடைய சீஷரை நோக்கி மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள் சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள்; அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். இயேசு, அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே !நீ பாக்கியவான் மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

மத்தேயு :20:20-23

அப்பொழுது செபெதேயுவின் குமாரருடைய தாய், தன் குமாரரோடு கூட அவரிடத்தில் வந்து, அவரைப் பணிந்துகொண்டு உம்மிடத்தில் ஒரு விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றாள். அவர் அவளை நோக்கி உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள் உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும் என்றாள். இயேசு பிரதியுத்தரமாக நீங்கள் கேட்டுக்கொள்ளுகிறது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை. நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும், நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களால் கூடுமா ? என்றார். அதற்கு அவர்கள் கூடும்

ன்றார்கள். அவர் அவர்களை நோக்கி என்பாத்திரத்தில்
ங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் நீங்கள்
றுவீர்கள். ஆனாலும் என் வலது பாரிசத்திலும் என் இடது
ரிசத்திலும் உட்கார்ந்திருக்கும் படி என் பிதாவினால்
வர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிறதோ
வர்களுக்கேயல்லாமல் மற்றொருவருக்கும் அதை அருளுவது
ன் காரியமல்ல என்றார்.







மத்தேயு : 16:21-23

அதுமுதல் இயேசு தாம் எருசலேமுக்குப்போய் மூப்பராலும் பிரதான ஆசாரியராலும், வேதபாரகராலும், பலபாடுகள் பட்டு கொலையுண்டு மூன்றாம் நாளில் எழுந்திருக்கவேண்டும் என்பதைத் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லத் தொடங்கினார், அப்பொழுது பேதுரு, அவரைத் தனியே அழைத்துக்கொண்டு போய் ஆண்டவரே இது உமக்கு நேரிடக் கூடாதே. இது உமக்குச் சம்பவிப்பதில்லை என்று அவரைக் கடிந்து கொள்ளத் தொடங்கினான். அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து எனக்குப் பின்னாகப்போ சாத்தானே நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் தேவனுக்கு ஏற்றவைகளைச் சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளைச் சிந்திக்கிறாய் என்றார்.

மத்தேயு : 4: 1-11

அப்பொழுது இயேசு, பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டு போகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்; அப்பொழுது பிசாசு அவரைப் பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய் தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்.

"பசியாயிருக்கிறீர்! நீர் தேவகுமாரனானா
இக்கல்லுகளை அப்பங்களாகும்ப
சொல்லும் என்றான்." நானோ பாடுகளே
இல்லாத மேசியாவாக மாற, மறுத்து
மனிதன் அப்பத்தினால் மட்டுமின்றி
தேவனுடைய வார்த்தைகளினாலே
பிழைப்பான் என்று கூறினேன்
மக்களுடைய உணர்ச்சிகளைத்
தூண்டிவிட்டு மேசியாவாக மாறும்
அவனது தவறான
ஆலோசனையை முறியடித்தேன்.
னொரு சமயம் தேவாலயத்தின்
பரிகையில் நிறுத்தி, நீர்
கிருந்து குதியும், உமக்கு
து நேரிடாது. நீர் தேவகுமாரன்
நிரூபித்தால் ஜனங்கள்
ம்மைப் புகழுவார்கள் என்றான்.
னில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக்
டளையிடுவார். உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு
ர்கள் உம்மைக் கைகயில் ஏந்திக்கொண்டு போவார்கள்
பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு
"உன் தேவனாகிய கர்த்தரைப்பரீட்சை பாராதிருப்பாயாக;
றும் எழுதியிருக்கிறதே" என்றார். மறுபடியும் பிசாசு அவரை
உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய் உலகத்தின்
ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக்
பித்து, நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து என்னைப்

பணிந்துகொண்டால் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு அப்பாலே போ! சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப் போனான். உடனே தேவதூதர்கள் வந்து அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

இரவில் ஒரு
ஒளியால்
த்தெழுந்த சீஷர்கள்
ரும், இயேசுவுடன்,
சேயும்,
யாவும் அமர்ந்து பேசிக்
ண்டிருப்பதைக்
ண்டனர்.

காட்சி முடி
ந்ததும் முன்பு
இயேசுவை
டுமே கண்டனர்

விடிந்ததும் நான்கு பேரும் மலையின் கீழே இறங்கி வந்தனர்

மத்தேயு : 17:1-8

ஆறுநாளைக்குப் பின்பு இயேசு பேதுருவையும் யாக்கோபையும்
அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு,
தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு
முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப்
பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல
வெண்மையாயிற்று; அப்பொழுது மோசேயும், எலியாவும்,
அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.
அப்பொழுது பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே நாம் இங்கே
இருப்பது நல்லது; உமக்குச் சித்தமானால், இங்கே உமக்கு ஒரு
கூடாரமும், மோசேக்கு ஒரு கூடாரமும், எலியாவுக்கு ஒரு
கூடாரமுமாக மூன்று கூடாரங்களைப் போடுவோம் என்றான்.
அவன் பேசுகையில் இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல்
நிழலிட்டது; "இவர் என்னுடைய நேச குமாரன் இவரில்
பிரியமாயிருக்கிறேன்; இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த
மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று; சீஷர்கள் அதைக் கேட்டு
முகங்குப்புற விழுந்து மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இயேசு
வந்து அவர்களைத் தொட்டு எழுந்திருங்கள் பயப்படாதேயுங்கள்"
என்றார். அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்க்கையில்
இயேசுவைத்தவிர வேறொருவரையும் காணவில்லை.

கடந்த இரவில் நடந்ததை விவரிக்க வார்த்தைகளே இல்லை நிச்சயமாக மோசே எலியாவை விட இயேசு உயர்ந்தவர் என்பது புரிகிறது.
அவர்கள் இவரது வருகைக்கு ஆயத்தப்படுத்தினவர்கள். இவரோ தேவனுடைய மகிமையாகவே இருக்கிறார்
இயேசு என் நேசகுமாரன் இவரில் நான் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள் என்ற சத்தமும் நான் கேட்டேன்.
யோவானே நானும் அதைக் கண்டேன். மெய்யாகவே அவர் மேசியாவாகிய கிறிஸ்து தான் இவரே ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்
பேதுருவே "ஆண்டவரே நாம் இங்கேயே இருக்கலாம் உமக்கும் மோசேக்கும் எலியாவுக்கும் தனித்தனி கூடாரங்களைப் போடலாம் என்று நீ சொன்னதையும் நான் கேட்டேன்
சிநேகிதரே! நான் மரணத்திலிருந்து எழும்பும்வரை நீங்கள் கண்டதை யாரிடமும் கூற வேண்டாம்.
முழுவதும் எதுவும் புரியவில்லைதான் என்றாலும் மவுனமாயிருப்போம்
தேவன் நம்மோடு இருக்கிறார் என்று நாங்கள் நம்புகிறோம்.
சிநேகிதரே வாருங்கள் நாம் எருசலேம் போகலாம்.

பஸ்கா பண்டிகைக்கு எருசலேமில் இருக்க இயேசு முடிவு செய்தார். தன் சீஷர்களுடன் ஒலிவ மலைக்கு வந்து சேர்ந்தார்

அங்கே எருசலேமுக்குப் பயணமாகச் செல்லும் சில யாத்ரீகர்களை அவர்கள் சந்தித்தனர்.

மத்தேயு : 21 : 1 -17

அவர்கள் எருசலேமுக்குச் சமீபமாய்ச் சேர்ந்து ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது, இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி: உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள். போனவுடனே அங்கே ஒரு கழுதையையும் அதனோடே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள். அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டுவாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால் இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள். உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி, அவர்களை அனுப்பினார்; இதோ உன் ராஜா சாந்தகுணமுள்ளவராய் கழுதையின்மேலும்,

கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிக்கொண்டு, உன்னிடத்தில் வருகிறார் என்று சீயோன் குமாரத்திக்குச் சொல்லுங்கள் என்று தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது. சீஷர்கள் போய், இயேசு தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்து கழுதையையும், குட்டியையும் கொண்டு வந்து அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களை போட்டு, அவரை ஏற்றினார்கள்; திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள் வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள். முன் நடப்பாரும் பின்நடப்பாருமாகிய திரளான ஜனங்கள் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா ! என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவர் எருசலேமுக்குள் பிரவேசிக்கையில் நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு இவர் யார் ? என்று விசாரித்தார்கள். அதற்கு ஜனங்கள்: இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த

ஊர்வலம் தேவாலயப் பகுதிக்கு வந்ததும்
பிச்சைக்காரர் மற்றும் பலவிதமான
வியாதியஸ்தர்களும் அதில் இணைந்து
கொண்டனர்

சிறு பிள்ளைகளும் கூட இயேசுவைப் புகழ
ஆரம்பித்தனர்.




இச் சிறுபிள்ளைகள் கூறுவதைக் கேட்கிறீரா? அவர்களை அடக்கி இப்பரிசுத்த இடத்திற்குரிய மரியாதையைக் கொடும்
பரிசுத்தமான இடத்திற்கு மரியாதை
இதோ இவர்கள் எல்லோரும் பரிசுத்தமா இடத்தில் வியாபாரம் செய்கிறார்களே, இது வெட்கமானதாக இல்லையா?

க்கதரிசியாகிய இயேசு என்றார்கள். இயேசு தேவாலயத்தில் ரவேசித்து ஆலயத்திலே விற்கிறவர்களும், ள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி க்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களின் னங்களையும் கவிழ்த்து, என்னுடைய வீடு ஜெபவீடு னப்படும் ! என்று எழுதியிருக்கிறது. நீங்களோ அதைக் ள்ளர் குகையாக்கினீர்கள் என்றார். அப்பொழுது குருடரும் டவர்களும் தேவாலயத்திலே அவரிடத்திற்கு வந்தார்கள்; ர்களைச் சொஸ்தமாக்கினார்; அவர் செய்த அதிசயங்களையும் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா ! என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும், பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கண்டு, கோபமடைந்து, அவரை நோக்கி : இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ என்றா அதற்கு இயேசு ஆம் கேட்கிறேன் குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகு செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா என்றார். அவர்களை விட்டு நகரத்திலிருந்து புறப்பட்டு, பெத்தானியாவுக்குப் போய், அங்கே இராத்தங்கினார்.

அது ஒரு உவமையும் தான். தேவனுடைய புதிய ஆலயமாகிய தமது சரீரம் பற்றி இயேசு பேசினார். அவரை அழித்துக் கொன்று விட்டாலும் மூன்று நாளில் அவர் உயிர்த்தெழுவார் என்பதை அது நடந்த பின்னர் புரிந்து கொண்டனர்.

விரைவிலேயே இயேசுவின் எதிரிகளான பரிசேயர்
ரும் பிரதான ஆசாரியனான காய்பாவின்
லைமையில் கூடிப் பேசினர்.

வான் : 11:47-50

பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் ஆலோசனைச்
ங்கத்தைக் கூடிவரச்செய்து, நாம் என்னசெய்கிறது ? இந்த
னிதன் அநேக அற்புதங்களைச் செய்கிறானே ! நாம் இவனை
டி விட்டுவிட்டால் எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்,
பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும்
த்தையும் அழித்துப் போடுவார்களே என்றார்கள்;

அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்துப் பிரதான
ஆசாரியனுமாகிய காய்பா என்பவன் அவர்களை நோக்கி:
உங்களுக்கு ஒன்றும் தெரியாது ஜனங்களெல்லாரும்
கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் ஜனங்களுக்காக மரிப்பது
நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலிக்கிறீர்கள்
என்றான்.

மத்தேயு : 26:3-5, 14 -16

அப்பொழுது பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், மூப்பரும், காய்பா என்னப்பட்ட பிரதான ஆசாரியனுடைய அரமனையிலே கூடிவந்து இயேசுவைத் தந்திரமாய்ப் பிடித்துக் கொலைசெய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள். ஆகிலும் ஜனங்களுக்குள்ளே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே அப்படிச் செய்யலாகாது என்றார்கள். அப்பொழுது, பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய், நான் அவரை உங்களுக்குக் காட்டிக்கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அவர்கள் அவனுக்கு முப்பது வெள்ளிக்காசைக் கொடுக்க உடன்பட்டார்கள்; அதுமுதல் அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான்.

இயேசுவையும் அவருடைய சீஷர்களையும் கண்டு பிடிக்க முடியாமல் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரர்கள் அவர்களைத் தேடிக் கொண்டிருந்தனர்.
சிநேகிதர்களே! இன்று பஸ்கா பண்டிகை. பேதுரு யோவான் நீங்கள் சென்று நாம் பஸ்காவை சாப்பிடும் படி ஆயத்தம் செய்யுங்கள்.
சரி ஆண்டவரே எங்கு யாரோடு?
எருசலேமில் நமக்காக ஒரு பெரிய அறை ஆயத்தமாயுள்ளது.
நகருக்குள் நுழையும்
தண்ணீர் குடம் சுமந்து
காண்பீர்கள்
நுழையும் வீட்டில்
ஆயத்தம்
இப்பொதெல்லாம் இயேசு என்னை நம்புவதில்லை. பொருளாளர் என்ற முறையில் பஸ்காவுக்காக ஆயத்தம் செய்வதில் நானும் ஈடுபட்டே ஆக வேண்டும். ஆஹா சந்திக்கப்போகும் இடத்தை அறிந்து கொள்வேன்
அதை அதிகாரிகளுக்கு அறிவித்தால் அவர்கள் வந்து இயேசுவைக் கைது செய்து கொள்வார்கள்
நேரங்களுக்குப்
பெண்கள் தண்ணீர் குடம் சுமந்து வருகிறார்கள். சிறப்பு ஏதுமில்லை
அதோ ஒரு மனிதன் தண்ணீர் குடம் சுமந்து வருகிறான், அசாதாரணமானது அவன் தானா?
நாம் அவனைப் பின் தொடருவோம்

லூக்கா : 22:7-12

